23rd March 1963]

(*b*) if so, when the works are expected to commence?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Consideration of proposals for the construction of overbridges at the existing level crossings at mile 300/2 of National Highways 7 on Tirupparankundram Road near Subramaniyapuram and at mile 300/7 of National Highways 7 on Tirupparankundram Road near Meenakshi Mills at Madurai, besides certain other similar schemes within Municipal limits outside Madras City has been deferred in view of the National Emergency.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : *தலைவர் அவர்களே, இந்த மேம்பாலமும், அடுத்து திண்டுக்கல் ரோடுக்குப் போகிற வழியில் அங்கு ஒரு மேம்பாலமும் அமைக்கவேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு முன்பே எஸ்டிமேட் தயார் செய்து, சாங்ஷன் ஆயிற்று. இருந்தும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படாததற்குக் காரணம் என்ன ?*

கனம் திரு. வெ. ராமைய்யா : *நான் என்னுடைய பதிலில் பின் பாகத்தைப் படிக்கிறேன். "இது போன்ற இன்னும் சில திட்டங்களும் தேசிய நெருக்கடி காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன".*

விற்பனைப் பொருள்கள் வரிவிதிப்பு

357-F கேள்வி.*—திரு. இராம. அரங்கண்ணல் :** *கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

விற்பனைப் பொருள்கள் வரி விதிப்புபற்றி ஆராய்ந்து யோசனைகள் கூற அரசு நிபுணர் யாரையாவது நியமனம் செய்ய உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRI. R. VENKATARAMAN : In view of the emergency, the Government have deferred for the present the proposal for appointment of an expert to review the working of the Madras General Sales Tax Act, 1959.

திரு. எஸ். முருகையன் : *ஸார், உணவுப் பொருட்களையாவது இந்த வரி விதிப்பிலிருந்து நீக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *வருகிற 28-ம் தேதி இந்த மானியக் கோரிக்கை வரும்போது, இதைப் பற்றிப் பேசலாம்; அப்பொழுது பதிலளிக்க முடியும்.*

நில உச்சவரம்புச் சட்டம்

357-G கேள்வி.*—திரு. மீ. கலியாணசுந்தரம் :** *கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

நில உச்சவரம்புச் சட்டத்தை அமல் படுத்தல் சம்பந்தமாக இதுவரை எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, was first published in the *Fort St. George Gazette* on 2nd May 1962. The rules necessary